VEDABHARATHI SEITHIGAL (Tamil Monthly Magazine)
REGD No. : TN/CC(S)DN/571/18-20 RNI No : TNTAM/2016/73726
TN/PM G (CCR) / WPP 605/19-20 / Valid from 28.02.2019 to 31.12.2020
Published on 1-7th (1st Week) Every Month




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி

சூர்யா ஜீவல்லர்ஸ் A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To Printed Matter

If not delivered please return to
VEDABHARATHY
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.

# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL

Tamil Monthly
தமிழ் மாத இதழ்

மலர்:4 இதழ்:4 ஜனவரி:2020 ரூ.10/– வருட சந்தா:ரூ.100/–
Volume:4 Issue:4 January:2020 Rs.10/- Annual Subs: Rs.100/-



SHRI MAHA MERU MANDALI TRUST
Reg. No. DIT (E) No.2 (651) / 12-13 / Sl. No. 90 / 13-14

Shri G.S. Venkataraman
Author

Shri N. Subramaniam
Managing Trustee

Shri S. Suga, Smt. B. Indira Balaji, Shri. R.V. Sathyanarayana,
Shri. J. Sathish, Sow. G.V. Mahasree Neela
Trustees

09.11.2019

அன்புடையீர்,

ஸ்ரீ மஹாமேரு மண்டலியின் ஆன்மீக நிகழ்வுகளில் தாங்கள் ஏற்கனவே பங்கு கொண்டு சிறப்பித்துள்ளீர்கள். கடந்த 28.10.2019 முதல் ஸ்ரீ மகாமேரு மண்டலியில் காலை 7.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை நாள்தோறும் ஸ்ரீ லலிதா சகஸ்ரநாம பாராயணமும், ஸ்ரீ துர்கா சப்தஶதி பாராயணமும் லோக க்ஷேமத்திற்காக நடைபெற்று வருகிறது. இந்த பாராயணங்கள் வரும் 23.3.2020 வரை நடைபெற உள்ளது.

இந்த பாராயணங்களில் தாங்களும் கலந்து கொண்டு பரதேவதையின் அனுக்கிரஹத்தை பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம் தனியாகவும் குழுவாகவும் வந்து பாராயணம் செய்யலாம்.

தாங்கள் வரும் விபரத்தை முன்கூட்டியே தெரிவித்து தொடர் பாராயணம் சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு நல்கும்படி கேட்டுக் கொள்கிறோம் மேற்கொண்டு விபரங்கள் அறிய கீழ்க்கண்டவர்களை தொடர்பு கொள்ளவும்.

1. ஸ்ரீமதி ராஜேஸ்வரி ஸ்ரீராம் 8939731326
2. ஸ்ரீமதி இந்திரா பாலாஜி 9444060346
3. ஸ்ரீமதி கிருஷ்ணப்ரியா ஜெயகுமார் 9442266120

இப்படிக்கு

பெறுநர்:

**N.சுப்ரமண்யம்**
நிர்வாக அறங்காவலர்

81/1, Mannappan Street, Kottur, Chennai - 600 085
Tel : 044-2447 4744




# இமைப் பொழுதில் கண் முன் உங்கள் கிரெடிட் கார்டு

சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி கிரெடிட் கார்டு




சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி ஆன்லைன் டைட்டானியம் கிரெடிட் கார்டு. வங்கியில் வைப்புக் கணக்கு (Fixed Deposit) வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கிரெடிட் கார்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிட்டி யூனியன் பேங்கின் வாடிக்கையாளர்கள் இந்த கிரெடிட் கார்டினை பெற CUB நெட் பேங்கிங் மூலம் எளிமையான முறையில் உடனடியாக விண்ணப்பிக்கலாம். நீங்கள் விண்ணப்பித்தவுடன் உங்கள் கம்யூட்டர் திரையில் Virtual Credit Card தோன்றும். இதனை உடனடியாக உபயோகப்படுத்தி ஆன்லைனில் ஷாப்பிங் மற்றும் டிக்கட் புக்கிங், பணம் செலுத்துதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

உங்கள் பிளாஸ்டிக் கிரெடிட் கார்டு விரைவிலேயே உங்கள் இல்லத்தையோ / அலுவலகத்தையோ வந்தடையும்.

CUB
TRUST AND EXCELLENCE
SINCE 1904

சிட்டி யூனியன் பேங்க்
www.cityunionbank.com ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000, Mobile : 7299075077 / 7299075078
Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

G-2, Vijay Builders, Plot No.24, Kandaswamy Nagar, 9th Cross Street,
Palavakkam, Chennai - 600 041, India.
Mobile : 98407 44400, 98402 43592, 98400 45776
Email : sreedhar.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகளின் அருளுரை தெய்வத்தின் குரல் 3ம் பாகம்

## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம் இது தான் அச்வமேதம்

இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்ம**
**அச்வமேத பலம் லபேத்**

என்பது சாஸ்த்ர வசனம்

பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.

### இந்த அறக்கட்டளையின் நோக்கம்

1. அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்
2. கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.
3. நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.
4. மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்

Contributions can be sent to :
K. JAYARAMAN, Trustee / Treasurer
No.3, Mullai Street, Balaji Nagar,
Adambakkam, Chennai - 600 088.
Cell : 9840045776 / Email : jayaraman2212@gmail.com




# வேதபாரதி
## செய்திகள்



**காயத்ரீ தேவி**
வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்
வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்
மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.

### வேதமந்திரம் - 4

**ந க1ர்மணா ந ப்1ரஜயா த4னேன, த்1யாகே3னைகே1**
**அம்ருத1த்1வம் ஆநஷு:|**

**-கை1வல்யோப1நிஷத்1.**

பொருள்:

கர்மத்தின் மூலமாகவோ புத்திரர்களினாலோ செல்வத்தின் மூலமாகவோ அம்ருதத்வம் கிடைக்காது. தியாகத்தினாலேயே அம்ருதத்வம் கிடைக்கும்.

அம்ருதத்துவத்திற்கு (மரணமிலா பெருவாழ்வு) தியாகம் ஒன்றே ஸாதனம். வைதிக ஸம்ப்ரதாயத்தில் இந்த மந்திரம் யதி வந்தனை மந்திரம் என்று ப்ரஸித்தமானது.

தியாகம் என்றால் அஞ்ஞான தியாகம்! அஹங்கார மமகாரங்களின் தியாகம்! அவித்யா காம கர்மங்களின் தியாகம்.

ஆத்ம ஜ்ஞானமே நிஜமான தியாகம். அதுவே முக்திக்கு வழி!

//ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி://

# வேதபாரதி செய்திகள்

**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 4 இதழ்: 4

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்
**ஆர்.வெங்கடராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை,
கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.



**புத்தகக் குழு**

ஸ்ரீ டி. சூரியநாராயணன்
ஸ்ரீ ஸ்ரீகாந்தன்
ஸ்ரீ G.விஸ்வநாதன், Vly
ஸ்ரீ விஸ்வநாதன், Ngr
ஸ்ரீ K. ராமன்
ஸ்ரீ மணிசங்கர்
ஸ்ரீ சங்கர்
ஸ்ரீ S. கிருஷ்ணமூர்த்தி
ஸ்ரீ M.V. சுப்ரமணியன்
ஸ்ரீ K.N. பத்மநாபன்
ஸ்ரீமதி சாந்தா நாகராஜன்
ஸ்ரீ K. நாராயணன்
ஸ்ரீ நடராஜன்
ஸ்ரீ K. ஸ்வாமிநாதன்
ஸ்ரீ V. ஸ்ரீராம்



நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
**Ph : 94434 95950**
**Email:vedabharathichennai@gmail.com**
**Website: www.vedabharathi.org**


## புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| ஒரு நிமிடம் உங்களோடு | 5 |
| அட்டைப்பட விளக்கம் | 7 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் | 12 |
| சுபாஷிதம் | 14 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 16 |
| குழந்தைகள் பகுதி | 18 |
| பழமொழிகளும் உண்மையான அர்த்தங்களும் | 32 |
| வியக்கவைக்கும் எண்கள் | 33 |
| தெரிந்து கொள்வோம் | 34 |
| பிரதக்ஷிணம் | 36 |
| தர்மத்தின் குரல் | 39 |
| பகவத் கீதை | 41 |
| புதுவை வேதபாரதி | 43 |



**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.100 |
| ஆயுள் சந்தா | ரூ.1500 |

சந்தா அனுப்புகிறவர்கள்
**Vedabharathi**
என்ற பெயருக்கு காசோலையை மேற்கண்ட அலுவலக முகவரிக்கு அனுப்பவும். சந்தா புதுப்பிப்பவர்கள் தங்களுடைய சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.

வங்கி மூலம் புத்தக சந்தா நன்கொடை வழங்கிட
**VEDABHARATHI**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**

**REGD No : TN/CC(S) / DN / 571 / 18-20**
**RNI No : 1282188**
**Title Code : TNTAM/2016/73726**
**R.Dic.No.1845/2015**
**VEDABHARATHI SEITHIGAL**
**(Tamil Monthly Magazine)**
**1-7th (1st Week) Every Month**
**TN/PM G (CCR) / WPP 605/19-20 /**
**Valid from 28.02.2019 to 31.12.2020**




# ஒரு நிமிடம் உங்களோடு

மனிதனுடைய நல்ல குணங்களில் தலை சிறந்து விளங்குவது “அடக்கம்”. “பணிவு”. ஒருவனுக்கு கல்வி, கேள்வி, குலம், செல்வம், பட்டம், பதவி முதலிய பல இருந்தாலும் அவனிடத்தில் **“அடக்கம்”** இல்லை என்றால், முதலில் கூறிய அனைத்தும் இருந்தும் அவை சிறப்படையாது. சாம்பார் செய்யும்போது புளி, காரம், மிளகு, பெருங்காயம், காய்வகைகள் சேர்த்தாலும் அதில் உப்பு சேர்க்கவில்லையானால் அந்த சாம்பார் உண்பதற்கு உகந்தது ஆகாது. உணவிற்கு உப்பு எப்படி இன்றியமையாததுபோல் ஒருவனுடைய வாழ்விற்கு **“அடக்கம்”** இன்றியமையாதது. திருவள்ளுவர் அடக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து **“அடக்கமுடைமை”** என்ற அதிகாரத்தை அமைத்து அதில் பத்து குறள்களை பாடியிருக்கிறார். பணிவதால் நமக்கு ஒன்றும் இழிவு வந்துவிடாது. அது நம்முடைய பெருமையைப் புலப்படுத்தும். துலாக்கோலில் தாழ்ந்த தட்டிற்குத்தானே பெருமை. காய்த்து பழுத்த பழங்களை உடைய மரக்கிளை தாழ்ந்துதான் இருக்கும்.

ஈரம் இல்லாத உலர்ந்த ஓலை சலசல என்று ஒலிக்கும். பச்சை ஓலை ஒலி எழுப்புவதில்லை. வெண்கல மணி அதிகமாக ஒலிக்கும். ஆனால் தங்க மணி ஒலிப்பதில்லை. அதனால் பச்சோலைக்கும், தங்க மணிக்கும்தானே பெருமை.

அனுமார் மிகவும் வலிமையுடையவர். அவர் ஸ்ரீ ராமனிடம் பேசும்போது தன் உடம்பை வணங்கி வாய் மறைத்தும் பயபக்தியுடனும், விசுவாசத்துடனும் நிற்பார்.

**“வணங்கிய மேனியன் மறைத்த வாயினன்**
**நுணங்கிய கேள்வியன் நுவல்வ தாயினான்”**

**(விபீஷணன் அடைக்கலம் படலம்)**

ஒரு ஆற்றில் நாணல் உயரமாக வளர்ந்திருந்தது. ஆற்றின் கரையில் ஓர் மரம் ஓங்கி வளர்ந்திருந்தது. ஒரு நாள் மாலை தென்றல் வீசிக் கொண்டிருந்தது. அப்போது நாணல் பலமாக ஆடியது. இதைக் கண்ட அந்த மரம் நாணலைப் பார்த்து “அற்பனே பலம் இல்லாமல் தென்றலுக்கெல்லாம் அசைந்து

கொடுக்கிறாயே" என்று ஏளனம் செய்தது. அடுத்த நாள் சூரைக் காற்றோடு பலத்த மழை பெய்தது. ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. காற்றிற்கு மரம் ஒடிந்து விழுந்தது. ஆற்றில் நாணல் வளைந்து கொடுத்ததால் அது ஒடியவில்லை. அப்போது நாணல் மரத்தைப் பார்த்து "மரமே நீயும் என்னைப்போல் வளைந்து கொடுக்கப் பழகியிருந்தால் இப்படி வேரோடு சாய்ந்திருக்க மாட்டாய். உருவில் சிறியதான எறும்பு தும்பிக்கைக்குள் நுழைந்து கடித்தால் யானையாலும் தாங்க முடியாது" என்றது.

**எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்**
**செல்வர்க்கே செல்வந் தகைத்து.** *(குறள் 125)*

பொருள் : அடங்கி நடத்தல் எல்லாருக்கும் நன்மையாகும். அவர்களுள்ளும் செல்வருக்கு அது ஒரு செல்வமாகிப் பெருமை கொடுக்கின்றது.

வளைந்து கொடுத்து வாழப்பழகினால் நாணல் போல் எச்செயலிலும் நிலைத்திருக்கலாம். நாமும் நாணலைப்போல் இருப்போம்.

தொகுப்பு : **டி.சூரியநாராயணன்**

"வேதபாரதி செய்திகள்"






சந்தாதாரர்களுக்கும்,
விளம்பரதாரர்களுக்கும்
இனிய
ஆங்கில புத்தாண்டு
மற்றும்
பொங்கல்
நல்வாழ்த்துக்கள்



# அட்டைப்பட விளக்கம்

## சுவாமி விவேகானந்தர்

சுவாமி விவேகானந்தர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவில் தலை சிறந்த சமயத் தலைவர்களுள் ஒருவராக இருந்தார்.



விவேகானந்தர் 1863ம் ஆண்டு ஜனவரி மாதம் 12ம் நாள் கல்கத்தாவில் திரு விசுவநாத் தத்தாவுக்கும், புவனேஸ்வரி தேவிக்கும் மகனாகப் பிறந்தார். இவருடைய தாய்மொழி வங்காளம். இவரது பெற்றோர்கள் இவருக்கு வைத்த பெயர் **"நரேந்திரநாத் தத்தா"**. ஆனால் காலப்போக்கில் இறையுணர்வின் மீது இவருக்கு இருந்த ஈடுபாட்டால் தன் பெயரினை **"விவேகானந்தர்"** என்று மாற்றிக்கொண்டார். தொடக்க கல்வியினை பயிலும்போது அவர் மிகச்சிறந்த நினைவாற்றலோடு இருந்துள்ளார். மேலும் இசை மற்றும் இசைக்கருவிகள் மேல் அவருக்கு ஈடுபாடு இருந்ததால் அவற்றை முறைப்படி கற்றார். சிறுவயது முதலே அவருக்கு தியானத்தின் மீது அதிக நாட்டம் இருந்தது. பள்ளிப்படிப்பை முடித்தவுடன் 1879 ஆம் ஆண்டு கல்கத்தாவில் மாநிலக் கல்லூரியிலும், பின்னர் ஸ்காட்டிஷ் சர்ச்சு கல்லூரியிலும் தத்துவம் பயின்றார். அந்த சமயத்தில் அவருக்கு ஆன்மீகம், கடவுள் மற்றும் கடவுள் வழிபாடு போன்ற விஷயங்களில் ஒரு தெளிவில்லாத நிலை உண்டானது. இந்த உண்மைகளைப் பற்றி அறிந்துகொள்வதற்காக 1881ஆம் ஆண்டு ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரிடம் சீடனாக சேர்ந்தார். அவருடைய ஈடுபாட்டால் விவேகானந்தரால் பக்தி மார்க்கம், மற்றும் ஞான மார்க்கம் இரண்டின் அவசியத்தினையும் புரிந்து கொண்டார்.

1886 ஆம் ஆண்டு ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் மறைவிற்கு பிறகு துறவியானார். பின்னர் நான்கு ஆண்டுகள்

இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்போது இந்திய மக்களின் வாழ்க்கை நிலை மிகவும் கீழானதாக இருந்தது. அது இந்தியர் ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டிருந்த காலமாகும். 24.12.1892 ஆம் ஆண்டு கன்னியாகுமரி சென்ற விவேகானந்தர், அங்கே கடல் நடுவில் அமைந்திருந்த ஒரு பாறைமீது தியானம் செய்ய வேண்டும் என நினைத்தார். ஆனால் அங்கு படகில் அழைத்துச் செல்ல மீனவர்கள் கட்டணம் கேட்டனர். துறவியான அவரிடம் காசு இல்லாததால் கடலில் நீந்தியே அந்த பாறையை அடைந்தார். அந்த பாறையின் மீது டிசம்பர் 25, 26, 27 ஆகிய மூன்று நாட்கள் தியானத்தில் இருந்தார். அந்த மூன்று நாட்கள் இந்தியாவின் கடந்த காலம், நிகழ்காலம், மற்றும் எதிர்காலம் குறித்து தியானம் செய்ததாக பின்னர் அவர் குறிப்பிட்டுள்ளார். இன்றும் அந்தப் பாறை விவேகானந்தரின் நினைவிடமாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரியிலிருந்து சென்னை வந்த விவேகானந்தர் 1893ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள சிகாகோ நகரில் நடைபெற்ற உலக சமய மாநாட்டில் கலந்துகொண்டார். அங்கு அவர் ஆற்றிய உரையின் ஆரம்பத்தில் அமெரிக்க மக்களை “சகோதர சகோதரிகளே” என்று அன்புடன் அழைத்ததால் அந்த நாட்டு மக்களால் ஈர்க்கப்பட்டு பலர் அவருக்கு சீடர்களாக மாறினர். அவர்களின் முதன்மை பெண் சீடர் “சகோதரி நிவேதிதா” அவர்கள்.

மீண்டும் இந்தியா வந்த விவேகானந்தர் நாடு முழுவதும் தனது மடங்களின் மூலம் ஏராளமான சொற்பொழிவின் மூலம் தனது விலைமதிப்பில்லா கருத்துக்களை மக்களுக்கு கூறி அவர்கள் வாழ்வு மேம்பட உதவிகளையும் செய்தார்.

1902 ஆம் ஆண்டு ஜூலை 4ஆம் நாள், தனது 39 ஆம் வயதில் பேலூரில் விவேகானந்தர் காலமானார். அவர் நிறுவிய இராமகிருஷ்ண மிஷன் மற்றும் மடங்கள் இன்று உலகம் முழுவதும் கிளைகளாக பரவி செயல்பட்டு வருகின்றன.

விவேகானந்தரின் பொன்மொழிகள் :



1. உண்மைக்காக எதையும் துறக்கலாம், ஆனால் எதற்காகவும் உண்மையைத் துறக்கக் கூடாது.
2. மனிதனிடத்தில் ஏற்கனவே இருக்கிற தெய்வீகத்தை வெளிப்படுத்துவதுதான் மதம். மதம் என்றால் அது அனுபூதியையே குறிக்கும்.
3. ஆன்மீகமே நம் நாட்டின் எல்லா கலாச்சாரங்களையும் இணைக்கும் சக்தி.
4. நம் நாடு வீரர்களை வேண்டி நிற்கிறது. வீரர்களாகத் திகழுங்கள்.
5. இளைஞர்களே தேச முன்னேற்றம் என்னும் தேர்ச் சக்கரத்தைக் கிளப்புவதற்கு உங்கள் தோள்களைக் கொடுங்கள்.
6. சுயநலம் என்பதை அறவே தூர எறிந்துவிட்டு வேலை செய்யுங்கள்.
7. ஏழைகளும், வறியவர்களும் படும் துன்பத்தையும், துயரத்தையும் கண்டு யார் உள்ளம் கசிந்து உருகுகிறதோ, யாருக்கு அவர்களுக்கு சேவை செய்யவேண்டும் என்ற எண்ணம் உடனடியாக ஏற்படுகிறதோ, அவர்களே உண்மையான தேச பக்தர்கள். சேவை செய்வதற்குத் தகுதியானவர்கள் அவர்களே மகாத்மாக்கள்.

இன்னும் ஏராளம், ஏராளம்.

இந்த வருடம் 12.01.2020, ஞாயிற்றுக்கிழமை சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாள். அன்றைய தினம், “கட உபநிஷதம்'' கூறும் மஹாவாக்கியமான ''எழுமின் விழிமின்” தொடரைக் கையாண்டு புதுயுக சாரதியாக விளங்கிய சுவாமியை நினைத்து போற்றி, அவருடைய பொன்மொழிகளில் சிலவற்றையாவது நம்முடைய வாழ்க்கையில் கடைபிடித்து நாட்டிற்காக சேவை செய்வோம். இதுவே சுவாமிஜியின் பிறந்தநாளில் நாம் அவருக்குச் செலுத்தும் மிகச் சிறந்த அஞ்சலியாகும்.

தொகுப்பு

**டி.சூரியநாராயணன்**

# ஸ்ரீ சங்கர பகவத் பாதர் அருளிய கேள்விகளும் பதில்களும்

Dr.ஷியாமா ஸ்வாமிநாதன்

கேள்வி : யாருடைய உபதேசங்களை ஏற்றுக் கொள்வது?
பதில் : குருவின் உபதேசங்கள்
கேள்வி : அனைத்திலும் உயர்ந்தது எது?
பதில் : தர்மம்
கேள்வி : எது பாவம் ?
பதில் : குருவின் வார்த்தைகளை அவமதிப்பது
கேள்வி : மனித வாழ்க்கைக்கு உத்தமம் எது?
பதில் : மற்றவரின் நன்மைக்காக (உயர்வுக்காக) வாழ்க்கையைத் தியாகம் செய்வது.
கேள்வி : யார் விரோதி?
பதில் : சோம்பேறித்தனம்
கேள்வி : சிறந்தது என்ன?
பதில் : பிறரிடமிருந்து உதவிகளைப் பெறாமல் இருப்பது.
கேள்வி : எது துக்கம்?
பதில் : சந்தோஷமில்லாதது.
கேள்வி : அறிவற்றது எது?
பதில் : கற்றபின் கற்றபடி நிற்காதது .
கேள்வி : தாமரை இலை தண்ணீர் போன்றவை எவை?
பதில் : இளமை, செல்வம், வாழ்க்கை
கேள்வி : விலைமதிப்பில்லாதது எது?
பதில் : தக்க தருணத்தில் செய்த உதவி
கேள்வி : ஈட்டி போல் இறக்கும் வரை மனதை குத்துவது எது?
பதில் : ரகசியமாக செய்த பாவங்கள்.
கேள்வி : உலகை வெல்பவன் யார்?
பதில் : சத்தியமானவனும் சகிப்புத்தன்மை கொண்டவனும்
கேள்வி : உயிரினங்கள் யாருடைய கட்டுப்பாட்டிற்குள் நிற்கும்?
பதில் : உண்மையைப் பேசி, அன்புடன் ஆதரித்து, தன்மை காட்டுபவனுக்கு.
கேள்வி : ஒருவன் எதைப் பற்றிக்கொள்ள வேண்டும்?
பதில் : தெரிந்த, தெரியாத நன்மைகள் நிறைந்திருக்கும் பாதையை
கேள்வி : ஈதல் என்பது என்ன?
பதில் : பலன்களை எதிர்பாராதது.
கேள்வி : நண்பன் என்பவன் யார்?
பதில் : பாவங்களிலிருந்து ஒருவனைப் பாதுகாப்பவன்



கேள்வி : எந்த இடம் ஒதுக்கப்பட வேண்டியது?
பதில் : துஷ்டர்கள் நிறைந்த இடமும் பேராசை பிடித்த தலைவன் ஆட்சி செய்யும் இடமும்.
கேள்வி : இந்த உலகத்தில் யாருக்காக துக்கப்படவேண்டும்?
பதில் : ஏராளமான செல்வம் இருந்தும் யாருக்கும் கொடுக்காத மனம் கொண்டவனுக்காக மட்டுமே.
கேள்வி : இரவும் பகலும் சிந்திக்க வேண்டியது எது?
பதில் : இறைவனின் திருப்பாதங்களை மட்டுமே (உலக வாழ்க்கையை அல்ல)
கேள்வி : ஒருவன் சம்பாதிக்க வேண்டியவை எவை?
பதில் : ஞானம், செல்வம், புகழ், வலிமை, தகுதி.
கேள்வி : நல்ல பழக்கங்களை எல்லாம் அழித்துவிடக்கூடியது எது?
பதில் : பேராசை
கேள்வி : யார் எதிரி?
பதில் : சிற்றின்ப இச்சை
கேள்வி : பாதுகாக்க வேண்டியது எது?
பதில் : நற்பெயர், தன்னலமற்ற மனைவி, பகுத்தறிவு
கேள்வி : இவ்வுலகின் கற்பக விருக்ஷம் எது?
பதில் : நல்ல மாணவனுக்குள் புகுத்தப்பட்ட அறிவு.
கேள்வி : வெறுக்கத்தக்க செயல் எது?
பதில் : கொடூரம்
கேள்வி : மதிப்புள்ள மனிதனுக்கு சாவை விட வேதனை தருவது எது?
பதில் : அபகீர்த்தி
கேள்வி : யார் உயர்வடைவார்கள்?
பதில் : தன்னடக்கமுடையவன்
கேள்வி : அதிர்ஷ்டமானவன் யார் ?
பதில் : ஆரோக்கியமானவன்
கேள்வி : உலகை காப்பவன் யார் ?
பதில் : சூரியன்
கேள்வி : ஒருவன் வாழ்வதற்கு அவசியமானது எது?
பதில் : மழை
கேள்வி : தைரியமானவன் யார் ?
பதில் : பயத்திலிருப்பவர்களை ரக்ஷிப்பவன்
கேள்வி : காணக்கூடிய கடவுள் யார்?
பதில் : அன்னை
கேள்வி : அன்னதானம் பெறத் தகுதியானவன் யார்?
பதில் : பசித்திருப்பவன்

## தெரிந்துகொள்வோம்

1. வேகவதி ஆற்றின் மறுபெயர் என்ன?
2. கனகதாரா ஸ்லோகம் யாரால் பாடப்பட்டது?
3. பாற்கடலில் லக்ஷ்மியுடன் பிறந்த தேவலோக யானையின் பெயர் என்ன?
4. ஆடித்தபசு விழா நடைபெறும் ஊர் எது?
5. வராக அவதாரம் எடுத்த திருமால் எந்த அசுரனிடம் போரிட்டார்.
6. சிவனடியாருக்கு உணவு அளித்த நாயன்மார் யார்?
7. குஜன், மங்கலன் எனப் பெயர் கொண்ட நவக்கிரஹம் எது?
8. சிந்தாமணி மந்திரத்திற்குறிய தெய்வம் எது?
9. விநாயகர் விஷ்ணுவிற்கு உபதேசித்த தத்துவம் எது?
10. பிரம்மாவின் வாகனம் எது?

விடை 15ம் பக்கம்

**ஜாதக பரிவர்த்தனைக்கு அணுகவும் :**
எண்.9, பழனி ஆண்டவர் தெரு,
ராதாநகர், குரோம்பேட், சென்னை - 600 044.

| திருமதி. தனலட்சுமி | திருமதி. ராஜலட்சுமி |
|---|---|
| 9444140119 | 7092199447 |

**ஜாதக பரிவர்த்தனைக்கு**
புதுவையில் பதிவு செய்ய விரும்புவோர் அணுகவும் :

**ஸ்ரீ பாலசுப்பிரமணியன்** 9442094380
**ஸ்ரீ நடராஜன்** 9443103404



## புத்தக வெளியீட்டு விழா



### இலங்கையில் இராமாயணத் தேடல்கள்

சிறந்த எழுத்தாளர், பத்திரிகையாளர், மொழிபெயற்பாளர், சமூக சேவகி என பன்முகங்கள் கொண்ட டாக்டர் ஷ்யாமா சுவாமிநாதன் அவர்கள் எழுதிய “இலங்கையில் இராமாயணத் தேடல்” என்ற புத்தகத்தின் வெளியீட்டு விழா 15.12.2019 ஞாயிற்றுக்கிழமை மாலை சென்னை வளசரவாக்கத்தில் நடைபெற்றது. விழாவில் ஏராளமானோர் கலந்து கொண்டார்கள். திருமதி. நாகரத்னா அவர்கள் வரவேற்புரை வாசித்தார்கள்.

விழாவிற்கு சென்னை ஸ்ருதி கேந்திரா அறக்கட்டளையின் ஸ்தாபகரும், நிர்வாக அறங்காவலருமான ‘‘ஸ்ரீ மோக்ஷ வித்யானந்த சரஸ்வதி ஸ்வாமிகள்’’ தலைமையேற்று புத்தகத்தை வெளியிட State Quality Monitor, Roads and Bridges, Govt. of Tamil Naddu திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் முதல் பிரதியை பெற்றுக்கொண்டார்.

புத்தகத்தை வெளியிட்டு ஆசியுரை வழங்கிய “ஸ்ரீ மோக்ஷ வித்யானந்த சரஸ்வதி ஸ்வாமிகள்’’ இராமாயணத்தைப் பற்றியும் அந்த அற்புத காவியம் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் எப்படி பாலமாக அமைந்துள்ளது என்றும் விளக்கி பேசி, தன் குழுவுடன் இலங்கைக்கு பயணம் வந்த டாக்டர் ஷ்யாமா இந்த புத்தகம் எழுத எவ்வளவு ஆர்வம் காட்டினார் என விளக்கி கூறினார்.

புத்தகத்தின் முதல் பிரதியை பெற்றுக்கொண்ட திரு.பாலசுப்பிரமணியன் அவர்கள், தான் ஸ்வாமிகளின் தலைமையில் ஆசிரியர் டாக்டர் ஷ்யாமா அவர்களுடன் இலங்கைக்கு பயணம் மேற்கொண்ட போது தமக்கு ஏற்பட்ட அனுபவங்கள் குறித்து பேசினார்.

வேதபாரதி அமைப்பின் சார்பாக செயலாளர் திரு.ஆர்.வெங்கட்ராமன், டி.சூரியநாராயணன், மற்றும் திரு. ராமசுப்பிரமணியம் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டார்கள். திரு.ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் தம்முடைய உரையில் வேதபாரதி அமைப்பின் செயல்பாடுகள் குறித்தும், வேதபாரதி நடத்தும் "யுவஸ்ரீ வாழ்வியல் பயிலரங்கம்" நிகழ்ச்சிக்கு ஆசிரியர் டாக்டர் ஷ்யாமா அவர்களின் பங்களிப்பு குறித்தும் விளக்கி பேசினார். அடுத்து டி.சூரியநாராயணன் அவர்கள் புத்தகம் குறித்து சிறப்புரை ஆற்றினார்.

கடைசியாக நன்றியுரை ஆற்றிய புத்தக ஆசிரியர் டாக்டர்.ஷ்யாமா அவர்கள் ஸ்வாமிஜியுடன் தமக்கு எப்படி அறிமுகம் ஏற்பட்டது என்றும், அவர் தலைமையில் அவருடைய குழுவுடன் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டபோது இலங்கையில் ஸ்வாமிஜி நடத்திய "இராமாயண வேதாந்த விளக்க வகுப்புகளில் தனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் குறித்தும், இந்த புத்தகம் எழுத இலங்கை யாத்திரை தமக்கு எவ்வளவு உதவியாக இருந்தது என்பது குறித்தும் விளக்கமாக பேசினார். முடிவில் ஸ்வாமிஜி அவர்களுக்கும், விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் தம்முடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள விழா இனிதே முடிவுற்றது.

விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் தேனீரும் பிரசாதமும் வழங்கப்பட்டது.

ஆசிரியர்.

---

## "வேதாந்த பிரபோதம்" புத்தகம்

நம் பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸவாமிகள் அருளியது. தற்போது கிரி டிரேடிங் நிறுவனத்தினர் அழகான வடிவத்தில் வெளியிட்டுள்ளார்கள். வேதபாரதி மூலம் பெறுவோர்க்கு சிறப்பு சலுகை உண்டு.

தொடர்புக்கு : **9444445156 / 97909 20672**



# சுபாஷிதம் - 14

"சுபாஷிதம் என்பது சொல்வதற்கு இனிமையான ஸ்லோகங்கள். இத்தகைய ஸ்லோகங்களின் பொருள் எவரையும் கவரும். சிறு குழந்தைகளுக்கு இத்தகைய நல்லுரைகளை கற்றுத்தருவதால் எதிர்காலத்தில் அந்த மாணவனின் மனவளம் செம்மையாக அமைவதோடு அவன் பலருக்கு வழிகாட்டியாக எடுத்துக்காட்டாக விளங்குவான்.

**யதா வாயும் ஸமாச்ரித்ய வர்த்தந்தே ஸர்வஜந்தவ:**
**ததா க்ருஹஸ்தமாச்ரித்ய வர்த்தந்தே ஸர்வ ஆச்ரமா:**

உலகின் உயிரினங்கள் எல்லாம் எப்படிக் காற்றை நம்பி வாழ்கின்றனவோ, அதுபோல வாழ்வின் எல்லா தர்மங்களும் இல்லற தர்மத்தைச் சார்ந்தே அமைகின்றன.

**க்ஷமா சஸ்த்ரம் கரே யஸ்ய துர்ஜன: கிம் கரிஷ்யதி**
**அத்ருணே பதிதோ வன்ஹி: ஸ்வயமேவோபசாம்யதி**

மன்னிப்பு என்னும் ஆயுதத்தின் முன்னே தீயோரால் என்ன செய்ய இயலும்? புற்களற்ற தரையில் நெருப்பு பரவாது.

**அ தாவஜ்ஜிதேந்த்ரியோ ந ஸ்யாத் விஜிதான்யேந்த்ரிய: புமான்**
**ந ஜயேத் ரஸனம் யாவத் ஜிதம் ஸர்வம் ஜிதே ரஸே**

நாவடக்கம் இல்லாத ஒருவனைப் புலன்களை வென்றவனாகக் கருத முடியாது. உணவின் மீதான இச்சையற்றவனே எல்லாப் புலன்களையும் வென்றவனாகிறான்.

தொகுப்பு : **பரிதி**

**12ஆம் பக்கத்து கேள்விகளுக்கான விடைகள்**

*1. வைகை 2. ஆதிசங்கரரால், 3. ஐராவதம்*
*4. சங்கரன் கோவில், 5. இரண்யாட்சன்*
*6. மாற நாயனார் , 7. செவ்வாய் (அங்காரகன்)*
*8. சரஸ்வதி 9. கணேச கீதை 10) யானை*

தொகுப்பு **பரிதி**

இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர
நிதிஉதவி செய்து வருபவர்
**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,** வேளச்சேரி

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 2 பகுதி - 41

சென்ற பல மாதங்களாக உங்கள் குழந்தைகளுக்கு தேவையான விஷயங்களைப் பற்றி அணுகுவது எப்படி என்று எழுதிவந்தேன்.

பல பெற்றோர்கள், குறிப்பாக தாய்மார்கள் கேட்கக்கூடிய விஷயங்கள் இரண்டுதான். ஒன்று 'டீன் ஏஜ்' பிரச்சினை, மற்றொன்று 'படிப்பு' , மார்க்'!

இவையிரண்டிலும் வெற்றி பெறத்தான் அடிப்படை விஷயங்களை எழுதி வந்தேன். அவற்றை மீண்டும் படித்துப் பாருங்கள். இனி வரும் அத்தியாயங்களில் 'டீன் ஏஜ்' பிரச்சினைகளில் மிக முக்கியமாக ***Smart Phone, Social Media Connection*** பற்றி பேசுவோம்.

'பதின் பருவம்' என்று அழகு தமிழில் கூறப்படும் 'டீன் ஏஜ்' என்பது சாதாரண விஷயமில்லை.

இப்பருவம், இதில் வரும் சிக்கல்கள் என்று இதைப்பற்றி பேசாத சேனல்களும், எழுதாத பத்திரிகைகளும் கிடையாது.

ஆனால் அவையனைத்தும் ஒரு மேற்கத்திய பாணி *(Western Concept)* கொண்டு பேசுகின்றன. பல நேரங்களில் அவற்றில் 'இடது சாரி' வாசனையும் உண்டு.

அதாவது நம் மதம் நம் கலாச்சாரம், நம் வீடு, நம் உறவு, வழி வழியாக வந்த குடும்பம், அவரவர் முறைப்படி இப்பருவத்தினை கையாண்டு, குழந்தைகளை வழி நடத்துவதை நாம் திரும்பிப் பார்ப்பதில்லை.

நம் பாரம்பரிய வழி முறைகளையும், இன்றைய நவீன வழி முறைகளையும் இணைத்து இன்று 'டீன் ஏஜ்' பருவத்தினருக்கு என்ன தேவையோ அதை காண்போம்.

அதற்குள் ஆழமாக செல்வதற்கு முன்னர் முதலில் 'டீன் ஏஜ்' பருவத்தின் அடிப்படை நிலையை நாம் புரிந்து கொள்ள



வேண்டும். இதை முதலில் தாய்மார்கள் தான் அறிந்து, புரிந்து கொள்ள வேண்டும். பெண்களே, நீங்கள் தானே உங்கள் குடும்பத்தின் முதல் மந்திரிகள்.!

**"அறிகொன்று அறியான் எனினும் உறுதி**

**உழையிருந்தான் கூறல் கடன்."**

*அதிகாரம் - 46 (அமைச்சு) - குறள் - 638*

ஒரு அரசாட்சிக்கு பொறுப்பாளி என்பவர் மந்திரி என்பதால், அறிய வேண்டியவற்றை அறியாதவனாக அரசன் இருந்தாலும் உறுதியான நல்ல ஆலோசனைகளைச் சொல்ல வேண்டியது அவரது பக்கத்தில் சதா இருந்து கொண்டிருக்கும் மந்திரியின் கடமையாகும் என்று விவரமாக விளக்குகிறார் திருவள்ளுவர்.

வீட்டுக்கு அரசன் என்று கணவன் கொண்டாடப்பட்டாலும், அனைத்து பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டு, உழைப்பவர்கள் பெண்கள் தானே!

அன்று வீட்டில் மட்டுமே பெண்கள் உழைத்தனர். இன்று வீடு, ஆபீஸ் வெளி வேலைகள், பேங்கிங் என்று பல்வேறு விஷயங்களை கையாள வேண்டிய காலகட்டம்.

அன்று தாய்மார்கள் படபடப்பாக இருந்தால் அவர்களுக்கு கை கொடுக்க சுற்றம் இருந்தது.

இன்று 'தனிக்குடித்தனம்' என்றொரு காலகட்டம், பெண்களுக்கு 'பிடுங்கல் குறைந்தது' என்று எண்ணினாலும், 'நானே எனக்கு நமஸ்காரம் செய்து கொண்டு' 'நானே எனக்கு அட்சதையும் போட்டுக்கொள்ள வேண்டும்' எனும் நிலையில் பெண்கள் இருப்பதால் பயம், கோபம், படபடப்பு, ஆத்திரம், பொறாமை, வேகம் என்று அனைத்து விஷயங்களும் தாய்மார்களுக்குள் புகுந்து விடுகிறது.

அதனால் தான் உங்கள் படபடப்பிற்கும், வேகத்திற்கும் ஏற்ப நேரடியாக 'டீன் ஏஜ்' பருவம் பற்றி பேசினோம்.

இனி வரும் மாதங்களிலும் 'டீன் ஏஜ்' விஷயம் தான் என்றாலும் சற்றே ஆழமாக, விவரமாகப் பேசுவோம்.

தொடரும்...

"வேதபாரதி செய்திகள்

# குழந்தைகள் பகுதி

## போட்டி எண் 1 (ஜனவரி 2020)

**பரிசு ரூ.1,000/- மற்றும் ஒரு ஆன்மீக புத்தகம்**

இது ''வேதபாரதி செய்திகள்'' பத்திரிகையின் சந்தாதாரர்களின் குழந்தைகளுக்காக நடத்தப்படும் போட்டி. இந்த போட்டி மாதா மாதம் நடத்தப்படும். 8 வயது முதல் 15 வரையில் உள்ள ஆண் மற்றும் பெண் குழந்தைகள் கலந்து கொள்ளலாம்.

**போட்டியின் விதிமுறைகள்**

1. போட்டிகளில் ''வேதபாரதி செய்திகள்'' புத்தக குழு உறுப்பினர்களின் குழந்தைகள் கலந்து கொள்ள முடியாது.
2. மொத்தம் 5 கேள்விகள் கேட்கப்படும் 4 கேள்விகள் ''வேதபாரதி செய்திகள்'' புத்தகம் ஜனவரி 2020 இதழிலிருந்தும். ஒரு கேள்வி புத்தகத்தில் இல்லாத கேள்வியும் கேட்கப்படும்.
3. சரியான பதில்களை ஒரு வெள்ளைத் தாளில் எழுதி உங்களின் கையொப்பம் இட்டு, உங்களைப் பற்றியான விவரங்களை இந்த புத்தகத்தின் 20ம் பக்கம் உள்ள படிவத்தில் சரியாக பூர்த்தி செய்து, அந்த படிவத்துடன் பதில் எழுதியுள்ள வெள்ளைத் தாளையும், உங்களுடைய சிறிய போட்டோவுடன் (Passport size) கீழ்க்கண்ட முகவரிக்கு 20.01.2020 தேதிக்குள் அனுப்பவேண்டும். தாமதமாக வரும் பதில்கள் போட்டியில் இடம் பெறாது.
4. கேள்விகளுக்கான சரியான பதிலை அனுப்புகிறவர்களுக்கு ரூ.1000/- சன்மானமாகவும், ஒரு ஆன்மீக புத்தகமும் பரிசாக அளிக்கப்படும். ஒன்றுக்கு மேல் சரியான பதில்கள் வந்தால் பரிசுக்குரிய ஒருவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவார்.
5. போட்டியில் வெற்றி பெற்றவரின் புகைப்படமும் விலாசமும் 2020 பிப்ரவரி மாத "வேதபாரதி செய்திகள்" புத்தகத்தில் வெளியாகும்.



**கேள்விகள்**

1. சுக்லாம்பரதம் விஷ்ணும் சசிவர்ணம் 'சதுர்புஜம்'... முழு ஸ்லோகத்தையும் எழுதி அதற்கான பொருளையும் (அர்த்தம்) எழுத வேண்டும்.

**புத்தகத்திலிருந்து**

2. "பெற்றோர்களே கவனியுங்கள்" கட்டுரையில் வரும் குறளை எழுதவும்.
3. **பகவத் கீதை கட்டுரை**
   பகவத் கீதையில் உள்ள மொத்த ஸ்லோகங்கள் எத்தனை?
4. ஆதிசங்கரரின் கேள்வி பதில்
   நண்பன் என்பவர் யார்? கேள்விக்கான பதில் என்ன?
5. **அட்டைப்பட விளக்கம் பகுதியில்**
   விவேகானந்தர் கன்னியாகுமரியில் பாறையில் எத்தனை நாட்கள் எந்தெந்த தேதிகளில் தியானத்தில் இருந்தார்?

**பதில்கள் அனுப்பவேண்டிய முகவரி**

**"Vedabharathi"**
D.Suryanarayanan
Mayfair Apartments,
Block-3, B-4, No.2-A, LIC Colony Main Road,
Velachery, chennai - 600 042. Cell: 988415302.

## திருமண வாழ்த்து



**வேதபாரதி**

**இல்லத் திருமணம்**

மணமக்கள்

சிர. **N.லோகேஷ்ரகுராமன்**

சௌ. **M.S.ஜெயசுகந்தி**

மணநாள் :
15.12.2019, ஞாயிற்றுக்கிழமை

இடம்: **"சிருங்கேரி வித்யாபாரதி பவனம்"**
ஸ்ரீரங்கம் திருச்சி

மணமக்கள் வேதநெறி வாழ்க்கை வாழ்ந்து, இறையருள் பெற்று இல்லற தருமத்துடன் இனிதே வாழ வேதபாரதி ப்ரார்த்திக்கிறோம்.

வேதபாரதி உறுப்பினர்கள்.

"வேதபாரதி செய்திகள்

# குழந்தைகள் பகுதி

**போட்டி எண் 1 (ஜனவரி 2020)**

போட்டோ

**படிவம்**

1. போட்டியிடும் மாணவன் / மாணவி

   பெயர்.................................................................................

2. வயது ..................................................................................
3. தந்தையின் பெயர் ....................................................................
4. தந்தையின் கைபேசி எண்..........................................................
5. வீட்டு விலாசம் .......................................................................

   ..........................................................................................

   ...........................................பிண்கோடு...............................

   படிக்கும் பள்ளியின் பெயர், இடம்.........................................

   ..........................................................................................

6. படிக்கும் வகுப்பு .....................................................................
7. தாங்கள் வீட்டிற்கு வரும் "வேதபாரதி செய்திகள்" புத்தகத்தின்

   சந்தா எண்.............................................................................

மாணவன் / மாணவி கையொப்பம்

தந்தையின் கையொப்பம்



# ஸ்ரீரமணபாரதி சொற்பொழிவு

## 03.12.2019 - வேளச்சேரி

வேதபாரதியும் டான்சி நகர், தண்டீஸ்ரர் நகர் ஆஸ்தீக ஸமாஜமும் இணைந்து 3.12.2019 அன்று மாலை 6.00 மணி முதல் நடத்திய ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம ஜபமும் ஸ்ரீ ஜகன்நாதன்ஜி அவர்களின் ஆன்மீக சொற்பொழிவும் அருள்மிகு சுந்தர விநாயகர் ஆலயத்தில் 10வது மெயின் ரோடு தண்டீஸ்ரர் நகர், வேளச்சேரியில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ சுந்தர விநாயகர் மகளிர் குழு ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயணம் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்ச்சியை மிகுந்த சிரத்தையுடனும், பக்தியுடனும் ஏற்பாடு செய்திருந்தார்கள்.




ஆன்மீக பெண்டீர் பெருமக்களுக்கு பாரத சம்பிரதாயப்படி மங்கள திரவியங்களும், மேலும் சிறப்பு செய்யும் வகையில் கார்த்திகை பண்டிகைக்கு ரசாயன கலப்பில்லாத வெல்லம் வழங்கி மகிழ்ச்சியுற்றார்கள். கூட்டுப்பிரார்த்தனை முடிந்தவுடன் ஸ்ரீ ரமண பாரதி அவர்கள் "ஸ்ரீ விநாயகர் விஜயமும் வாழ்க்கையி வெற்றியும்'' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.

மேலும் நம் வாழ்க்கையை செம்மைப்படுத்தி வாழவும், மேற்கத்திய கலாச்சாரத்தை தவிர்த்திடவும், பாரதப் பண்பாட்டை கடைபிடிக்கவும் சிறந்த மேற்கோள்கள் செல்லி புரியவைத்தார்கள். டான்சி - தண்டீஸ்ரர் நகர் ஆஸ்தீக ஸமாஜம் நிர்வாகிள் சிறந்த ஏற்பாடுகளை செய்திருந்தார்கள். விழா ஏற்பாடுகள் ஒருங்கிணைப்பு பணிகளை டான்சி நகர் ஸ்ரீராமன், அவர்களும் தண்டீஸ்வரார் நகர் ஸ்ரீ சீனிவாசன் அவர்களும், செய்திருந்தார்கள். சாந்தி மந்திரத்துடன் விழா நிறைவுபெற்றது.

**பயன் எண்ணாமல் உழைக்கச் சொன்னான்**

**பக்தி செய்து பிழைக்கச் சொன்னான்** - பாரதி






# கூட்டுப் பிரார்த்தனை

## 12.12.2019 - ஸ்ரீ மாதா டிரஸ்ட்

*வேதபாரதி அமைப்பின் சார்பில் 12.12.2019 அன்று மாலை 6.00 மணிக்கு 'தாயே சக்திகொடு' கூட்டுப்பிரார்த்தனை நிகழ்ச்சி. ஸ்ரீ மாதா ட்ரஸ்ட் வளாகம், நம்ம தர்மசாலா நெ. 9, யோகி கார்டன் ஸ்ரீராம் நகர் அடையாரில், மிகச்சிறப்பாக நடைபெற்றது. புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நம் சகோதர சகோதரிகள் விரைவில் குணம் பெற்று இல்லம் திரும்பிட வேண்டி ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம், ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம பாராயணம் மற்றும் அர்ச்சனை செய்து மனம் உருக அம்பாளிடம் பிரார்த்தனை செய்தோம்.*




*ஏழை புற்றுநோயாளிகளை காக்கும் மாபெரும் பணியை தொடர்ந்து 20 ஆண்டுகளாக செய்து வரும் ஸ்ரீ மாதா ட்ரஸ்ட் பணி அளப்பரியது. வாழ்நாள் சாதனையாளர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி மாமாவும், மாதா ட்ரஸ்ட் உறுப்பினர்களும் நிர்வாகிகளும் எடுத்துள்ள இந்த புனிதப் பணியை தொடர்ந்து செய்து வருவதில் நாமெல்லாம் கூட்டுப்பிரார்த்தனை மூலம் பிரார்த்தனை செய்தது மிகப்பாக்யமாக வேதபாரதி கருதுகிறது.*

*வேதபாரதியுடன் இணைந்து ஸ்ரீ மஹாமேரு மண்டலி உறுப்பினர்களும் அதன் செயலாளர் ஸ்ரீ சுப்ரமணியம் அவர்களும் பிரார்த்தனையில் பங்குபெற்றார்கள். வேளச்சேரி ஸ்ரீ மஹா பெரியவா அனுஷ பூஜை ஸமிதி உறுப்பினர்களும் அதன் பொறுப்பாளர் ஸ்ரீ சுகவனம், ஸ்ரீ நாராயணன், ஸ்ரீ மணி மாமா ஆகியோரும் கலந்து கொண்டு வாழ்வின் பெரும்பேறு பெற்றார்கள்.*

**"பாடுவார் பசி தீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்**

**வாயினால் உன்னைப் பரவிடும் அடியேன்**

**படுதுயர் களைவாய் பாசுபதா பரஞ்சுடரே"**




# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

2000–ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயர் தீர்க்கும் "இலவச காப்பகம்"



சேலத்தைச் சேர்ந்த தினக்கூலி பெறும் ஏழை நெசவாளியின் மகளான இவளுக்கு காலில் புற்றுநோய். இவளின் படிப்பு தடை பட்டிருக்கிறது. நோயின் தாக்கம் இக்குழந்தையை வாட்டுகிறது; கருவில் சுமந்தது போதாதென்று, இப்போதும் இவளை இடுப்பில் சுமந்தபடி நம்பிக்கையுடன் சிகிச்சையளித்து வரும் தாய்; இவர்களை மனதில் சுமந்தபடி, பிழைப்பிற்காக ஊரில் கூலி வேலை செய்யும் தந்தை; இவர்களின் துயரம் வார்த்தைகளால் சொல்லித் தெரியவேண்டியதில்லை அல்லவா? கேன்சர் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதற்காக, நம்ம தர்மசாலாவில் தஞ்சமடைந்திருக்கும் இவர்கள் தற்போது ஸ்ரீ மாதா டிரஸ்டின் பிள்ளைகள். இந்தக் குழந்தை யின் எதிர்காலம் இப்போது நம் அனைவரின் கையில். விதியென்று சொல்லி நாம் வேடிக்கை பார்க்கலாகாது. உங்களைப்போன்ற மனித நேய மனங்களின் உதவியுடன் இவள் குணமாக ஸ்ரீ மாதா டிரஸ்ட் அனைத்து உதவிகளையும் செய்து வருகிறது. **ஏழை புற்று நோயாளி களுக்கு உதவிடுங்கள்; உண்மையான இன்பத்தை உணர்ந்திடுங்கள்...!**

**படித்ததை பகிர்கிறோம்...** ஒரு தனியார் நிறுவன நண்பர்கள் ஒன்று கூடி வாரம் ஒரு வேளை தங்களது உணவைத் துறந்து, அதற்கு ஈடான பணத்தைக் கொண்டு ஒரு பள்ளியில் படிக்கும் ஏழை மாணவர்களுக்கு ஒரு வேளை உணவு அளித்து வருகிறார்கள். நீங்கள் ஏன் ஒரு வேளை பட்டினி இருக்க வேண்டும்; அப்படி இல்லாமலேயே உங்களால் உதவ முடியுமே? என்றதற்கு – உண்மைதான்! ஆனால், அப்படிச் செய்தால் பசியின் கொடுமையை உணராமல், எங்களது சேவை தொய்வடைய வாய்ப்பு உள்ளது. அதனாலேயே "பசியின் வேதனையை எங்களுக்கு நாங்களே நினைவூட்டிக்கொள்கிறோம்" என்றனர்.



இவர்களைப் போன்று நாம் ஒவ்வொருவரும் மனிதாபிமானத்துடன் உதவி செய்ய முடியும். சிறிய முயற்சிதான்..!! ஒரு வேளை பட்டினி நம்மை ஒன்றும் செய்துவிடாது. அதே சமயம், நம்மால் ஒருவருடைய பசியை, அதுவும் நோயுடன் போராடும் ஏழை புற்றுநோயாளியின் துயரத்தைத் தீர்க்க முடியும் என்றால் அதைவிட இன்பம் வேறு இல்லை. **நம் முன்னோர்கள் தர்மத்தில் சிறியது, பெரியது என்று வகுக்கவில்லை. தர்மத்தில் சிறந்தது தர்மம் செய்வது மட்டுமே...**



பெங்களூரைச் சேர்ந்த திருமதி **சத்யா – திரு செந்தில்நாதன்** ஆகியோர் **நம்ம தர்மசாலா**விற்கு விஜயம் செய்து நன்கொடை வழங்கி, ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவு பரிமாறி உள்ளம் மகிழ்ந்தனர்.

**தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்...**

ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம்
ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்
ரூ.25,000/- நிதியளித்து ஒரு நாள் "நம்ம தர்மசாலா"வின் செலவினை ஏற்கலாம்
ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம்
ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம் அல்லது
ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution by CHEQUE / NEFT / CASH / M.O.
Account Name: SRI MATHA TRUST | Bank Name: INDIAN OVERSEAS BANK
Branch: Gandhi Nagar, Chennai-20.
Current A/c No.: 163502000001090 | IFSC Code: IOBA0001635

Donations to our Trust is exempted U/S.80 (G) of the Income Tax Act.
After doing this benevolent act kindly SMS your postal mailing address or kindly e-mail the donation details to enable us send our receipt.

Admin Office: 95/6, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, [Opp. to Thirukkural Unavagam] Adyar, Chennai - 600 020.
Tel: (044) 2442 0727 / (044) 4266 1687 Mobile: 9444001065 / 9381020727 9003247857 Email : vkrishnamoorthy.smt@gmail.com

Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar, Adjacent to IIT Compound, Off:Pallipattu Main Road, Chennai-113. Tel: 044 - 4509 8647

Regd. Office: 'NATHA KAMALAM' 1-A, Periyazhwar Street, Sundaram Colony, East Tambaram, Chennai - 600 059.

# ராஜலட்சுமி கல்யாண மண்டபம்

வேளச்சேரி மெயின் ரோடு, தண்டீஸ்வரம்,
சென்னை - 600 042.




- 800 பேர் அமர்ந்து ஆசிர்வதிக்க ஏ/சி ஹால்.
- சகல வசதிகளுடன் கூடிய மணமகன், மணமகள் அறைகள்.
- உறவினர்கள் தங்க - குளிரூட்டப்பட்ட அறைகள்.
- விசாலமான கார் பார்க்கிங்.
- வெகு அருகில் சிவன், பெருமாள் ஆலயங்கள்.
- நகருக்கு மத்தியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற மண்டபம்.
- 24 மணி நேரமும தண்ணீர் & மாடுலர் கிச்சன் வசதி.

தொடர்புக்கு

**48625585 / 9840545585**




# 11-வது ஆண்டு ஆன்மீக கண்காட்சியின் முன்னோட்ட கூட்டம்

ஹிந்து ஆன்மீக மற்றும் சேவைக் கண்காட்சி 28.01.2020 முதல் 03.02.2020 வரை நடைபெறுவதை ஒட்டி 22.1.2019 ஞாயிறு வேளச்சேரி அருள்மிகு தண்டீஸ்வரர் ஸ்வாமி திருக்கோவிலில் ஞாயிறு மாலை 4.20 மணி முதல் 5.30 மணி வரை




வேளச்சேரி பள்ளிக்கரணை, ஆதம்பாக்கம் நங்கநல்லூரில் உள்ள கோவில் பொறுப்பாளர்கள் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. 11வது ஆண்டு ஹிந்து ஆன்மீக மற்றும் சேவைக் கண்காட்சி வேளச்சேரியில் நடைபெறுவதால் நம் கோவில்களுக்கு வரும் பக்தர்களுக்கு சேவை கண்காட்சி நடக்கும் நாட்கள், நடக்கும் நிகழ்வுகள் குறித்து தகவல் தெரிவித்திட கேட்டுக் கொள்ளப்பட்டது. எல்லா கோவில்களிலும் தகவல் அறிவிப்பு வைப்பது என்றும், ஆன்மீக ரதங்கள் வரும் போது ஒத்துழைப்பு நல்கவும், 31.01.2020 வெள்ளி அன்று நடக்க உள்ள பொது பூஜையில் நம் எல்லா ஸமுதாய பெண்களையும் கலந்து கொள்ள செய்வது என்றும் கருத்து பரிமாற்றம் செய்யப்பட்டது.

கூட்டத்தில் கண்காட்சியின் நிர்வாகிகள் ஸ்ரீ சத்ய நாராயணன், ஸ்ரீ சேஷாத்ரி, ஸ்ரீ மணி அவர்கள் கலந்து கொண்டு, ஆன்மீக கண்காட்சியின் நோக்கம், பங்குபெறும் ஆன்மீக பெருமக்கள் குறித்தும் நடக்கவுள்ள பெரிய நிகழ்ச்சிகள் குறித்தும் மிக சரியான முறையில் விளக்கப்பட்டது.

சிவத்திரு. குமாரராஜா, வரவேற்புரையும், விளக்கவுரையும் ஆற்றினார்கள். ஸ்ரீ சாமிநாதன் நன்றியுரை ஆற்றினார். திரளான கோவில் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டார்கள். வேதபாரதி ஸ்ரீவெங்கட்ராமன் அறிமுக உரை ஆற்றினார்கள்.

ஆசிரியர்



# நமது தர்மம்

## தர்மப் பிரமாணங்கள்

உலகத்தில் புஸ்தகங்கள் நிறைய இருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விஷயத்தைச் சொல்லுகிறது. ஒவ்வொரு மதத்தினரும் ஏதாவது ஒன்றைக் கௌரவமாக வைத்திருக்கிறார்கள். எல்லாம் புஸ்தகங்களே. ஆனாலும் ஒரு புஸ்தகத்தை விசேஷமாகக் கொண்டாடுகிறார்கள். அதில்தான் ஜன்மம் கடைத்தேறும் வழிகள் சொல்லப்படுவதாகச் சொல்லுகிறார்கள். அதில் இருக்கிறது எல்லாவற்றிலும் முக்கியமானது என்று எண்ணுகிறார்கள். அந்தப் புஸ்தகத்துக்குப் பூஜை செய்கிறார்கள்; நமஸ்காரம் செய்கிறார்கள். சில மதஸ்தர்கள் அந்தப் புஸ்ததத்திற்கே தனியாகக் கோயில் கட்டி வணங்குகிறார்கள். சீக்கியர்கள் அவ்வாறு செய்து வருகிறார்கள். அவர்களுடைய மதப் புஸ்தகத்தை அவர்கள் கிரந்த ஸாஹேப் என்று மரியாதையாகச் சொல்லுவார்கள். இப்படி ஒவ்வொரு மதத்தினரும் தங்கள் தங்கள் ஆத்ம க்ஷேமத்திற்கு வேண்டிய மார்க்கங்களைச் சொல்லும் ஒவ்வொரு புஸ்தகத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

நம்முடைய வைதீக மதத்திற்கு எந்தப் புஸ்தகம் இருக்கிறது? மற்ற மதஸ்தர்களை உங்கள் மதப் புஸ்தகம் எது என்று கேட்டால் அவர்களுக்குச் சந்தேகமில்லாமல் இன்னது என்று தெரியும். நம்மைக்கேட்டால் சைவர்கள் தேவாரம் திருவாசகம் என்று சொல்லுவார்கள். வைஷ்ணவர்கள் ராமாநுஜர் செய்த ஸ்ரீ பாஷ்யம் என்று சொல்லுவார்கள். கனபாடிகள் வேதந்தான் என்பார்கள். இங்கிலிஷ் வாசித்துக் கொஞ்சம் வைதிக சிரத்தை உள்ளவர்கள் கீதை என்பார்கள். எல்லோருக்கும் பொதுவாக எந்த மதப் புஸ்தகம் இருக்கிறதென்றால் எல்லோரும் சேர்ந்து ஒன்றைச் சொல்லுவதில்லை. இதற்கு என்ன காரணம்? முக்கிய காரணம் ஒன்று இருக்கிறது. மற்ற ஜனங்கள் எந்த மதத்தில் ஜனனம் ஏற்பட்டிருக்கிறதோ அந்த மதப் படிப்பை முதலில் இரண்டு அல்லது மூன்று வருஷங்கள் படித்துவிட்டு அப்புறம் லௌகிகப் படிப்பைப் படிக்கிறார்கள். அதனால் சிறு பிராயத்திலேயே அவர்களுக்கு மதத்தைப்பற்றிய ஞானம் ஏற்பட்டுவிடுகிறது. நம்முடைய மதத்தில் மதத்தைப்பற்றிப் படிப்பதே கிடையாது.

தொடரும்.



# ஆதம்பாக்கம் வேதபாரதி

வேதபாரதி அமைப்பும் ஸ்ரீ மஹாமேரு மண்டலியும் இணைந்து ஆதம்பாக்கம் வி.வி.காலனியில் உள்ள ஸ்ரீ வேத வ்யாஸ ட்ரஸ்ட் மண்டபத்தில் 29.11.2019 முதல் 1.12.2019 முடிய 3 நாட்கள் ஸ்ரீ சங்கர விஜயமும் சனாதன தர்மமும் என்ற தலைப்பில் ஸ்ரீ ரமண பாரதி அவர்களின் ஆன்மீக சொற்பொழிவை நடத்தினார்கள்.

ஆதம்பாக்கத்தில் உள்ள ஸ்ரீ ராஜவிநாயகர் பக்த மண்டலி, நாராயணீய மஹால் மண்டலி, ஆதம்பாக்கம் சங்கராய மண்டலி, ஸ்ரீ துர்கா மண்டலி, ஸ்ரீ புவனேஸ்வரி ஆலய துர்கா வழிபாட்டுக்குழு ஆண்டாள் நகர் ஆகிய மண்டலி உறுப்பினர்கள் 29.11.2019 வெள்ளியன்று மாலை ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமமும், 30.11.2019 அன்று மாலை ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமமும் பாராயணம் செய்தார்கள். பெண்கள் ஒற்றுமையோடு அந்தந்த பகுதியில் ஒன்று சேர்ந்து மண்டலி அமைத்துக்கொண்டு, தாங்கள் அம்பாளை நினைத்து பாராயணம் செய்வதும் மற்றவர்களுக்கு கற்றுக் கொடுப்பதும் சாலச்சிறந்தது. இது சமுதாயத்தில் மிகப்பெரும் நல்ல அதிர்வலைகளை உண்டு பண்ணும், நல்ல சிந்தனையை தோற்றுவிக்கும். ஆதம்பாக்கம் மண்டலி குழுக்கள், மஹாமேரு மண்டலியில் இணைந்து செய்கின்ற இந்தப் பணி மிகவும் பாராட்டுக்குரியது.

1.12.2019 அன்று பெய்த மிக அதிகமான மழையையும் பொருட்படுத்தாமல் குழந்தைகள் ஓவியப்போட்டியில் கலந்து கொண்டு பரிசுகளையும் பாராட்டுகளையும் அள்ளிச்சென்றனர். ஸ்ரீ ஆதி சங்கரரைப் பற்றி உபன்யாசம் செய்த சிறுவன் மிக அற்புதமாக தனது உடல் மொழியுடன் அனாயாசமாக உபன்யாசம் செய்தது மிகவும் பாராட்டுக்குரியது.

ஸ்ரீ கவிஞர் புலவர் ராமசந்திரன் ஐயா அவர்கள் ஸ்ரீ ஆதி சங்கரர் அருளிய ஸ்ரீ ஸௌந்தர்ய லஹரீ தமிழில் கவிதி நூறு மிக

அற்புதமாக புத்தகம் தயாரித்து 1.12.2019 அன்று மாலை ஸ்ரீ ரமண பாரதி அவர்களால் வெளியிடப்பட்டது. வேதபாரதி விழாவில் இப்புத்தகத்தை வெளியிட வாய்ப்பு கொடுத்த கவிஞர் புலவர் ஸ்ரீ ராமச்சந்திரன் ஐயா அவர்களுக்கும் வெளியீடு செய்த ஸ்ரீ ரமண பாரதி அவர்களுக்கும் வேதபாரதியின் பணிவான வணக்கங்கள். இறைவன் திருவடிகளில் செயல்களெல்லாம் சமர்ப்பணம்.



3 நாட்களும் ஸ்ரீ ரமண பாரதி ஸ்ரீ சங்கரரின் மேன்மையை சொல்லி அத்வைத சித்தாந்தத்தை மிக எளிமையாக நமக்கெல்லாம் புரியும் வண்ணம் சொல்லியது மிக அருமை. பாரத நாட்டில் பிறந்து சங்கரரை தெரிந்து கொள்ளாமல் வாழ்வது கை மேல் நல்ல உணவு இருந்தும் நாம் உண்ணாமல் இருப்பதற்கு சமம். நிகழ்ச்சிக்கு வந்து பெருமை சேர்த்த ஆதம்பாக்கம் ஸ்ரீ சர்மாஜி அவர்களுக்கும் ஸ்ரீ ஜெயராமன் அவர்களுக்கும், ஸ்ரீ ராதாகிருஷ்ணன் மண்டப உரிமையாளர்க்கும் வேதபாரதியின் நன்றிகள் பல.

- அம்பாளின் பாத துளியே முக்தி சாதனம்

ஆசிரியர்.



# வருந்துகிறோம்...!



## வேத மாதாவின் அருந்தவப் புதல்வர்

நன்னிலம் ப்ரஹ்மஸ்ரீ ராஜகோபால கனபாடிகள் அண்ணா அவர்கள் 24.12.2019 இரவு சிவபதம் அடைந்தார்கள் என்ற செய்தி நம்மை பேரிடியாக தாக்கியது. ஸனாதன தர்மத்திற்கு அண்ணா அவர்களின் பங்களிப்பு மிக அளப்பரியது. தலை சிறந்த சாஸ்திர பண்டிதர்களில் முக்யமானவர். அவரால் பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன் பெறும் வைதீகஸ்ரீ இதழ் மிக உயர்வானது. ஆதாரபூர்வமானது. ஆயிரக்கணக்கான அந்தண ஸமூகத்தினர்களுக்கு விஷய ஞானம் அளித்த பெரும் கொடையாளர். அவருடைய ஈடுபாடும், கடின உழைப்பும், அயராத முயற்சியால் அண்ணாவிற்கு கிடைத்த விருதுகள் பெருமை பெற்றன. அவரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கு வேத பாரதியின் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்.

## பழமொழிகளும் அவற்றுக்குண்டான உண்மையான அர்த்தங்களும்

பழமொழி என்பது ஒரு செயலுக்கு அல்லது செய்கைக்கு விளக்கம் தர சொல்லப்பட்டது. அந்தக்காலத்தில் சொல்லப்பட்ட பழமொழிக்குண்டான உண்மையான அர்த்தங்கள் நாளடைவில் மருவி தற்போது ஏதோ அர்த்தங்கள் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட பழமொழிகளின் சரியான விளக்கங்கள் இந்தப்பகுதியில் தொடர்ந்து அளிக்கப்படும்.

**1. ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் ?**

தற்போது கூறும் பொருள் :
மற்றவர்கள் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் உன் குழந்தை தானே வளர்ந்து விடும்.

**உண்மையான பொருள்**
ஊரான் வீட்டு பிள்ளையாகிய உன் கர்ப்பிணி மனைவியை பாசத்துடன் ஊட்டி வளர்த்தால், அவள் வயிற்றில் இருக்கும் உன் குழந்தையும், ஆரோக்கியமாக தானே வளரும் என்பதே உண்மையான பொருள்.

**2. கழுதைக்கு தெரியுமா கற்பூர வாசனை.**

தற்போது கூறும் பொருள் :
கழுதைக்கு கற்பூர வாசம் தெரியாது.

**உண்மையான பொருள்**
'கழுதைக்கு தெரியுமாம் கற்பூர வாசனை'
கழு என்பது ஒரு வகை கோரப்புல். அதில் பாய் தைத்து படுத்து பார்த்தால் கற்பூர வாசனை தெரியும் என்பதே சரியான விளக்கம்.

**3. களவும் கற்று மற.**

தற்போது கூறும் பொருள் :
தீய பழக்கமான களவு (திருட்டை) நாம் கற்று கொண்டு, மறந்துவிட வேண்டும்.

**உண்மையான பொருள்**
களவும், கத்தும் மற.
களவு - திருடுதல்; கத்து - பொய் சொல்லுதல். தீய பழக்கமான திருடுதல், பொய் சொல்லுதல் இவற்றை ஒருவன் தன் வாழ்நாளில் மறந்து ஒழுக்கமாக இருக்க வேண்டும்.

**- தொகுப்பு ஆதித்யன்**



## வியக்க வைக்கும் எண்கள்

கணிதம் என்பது ஒரு ஆழமான கடல். இந்த கணிதத்தின் அடிப்படை அம்சமே ஒன்றிலிருந்து ஒன்பது வரையுள்ள எண்கள்தான். எண்கள் வரிசையில் ஒன்று முதல் 100 வரை விரிவாக பார்ப்போம்.


**எண் 3-ன் சிறப்பு (சென்ற மாத தொடர்ச்சி)**

21. மும்மூர்த்திகள் - பிரும்மா, விஷ்ணு, சிவன்
22. மூன்று திவ்ய தேசங்கள் - திருவரங்கம், திருமலை, காஞ்சிபுரம்
23. ஜீவாத்மாக்கள் நற்கதியடைவதற்காக ஆசாரியர்கள் அருளிய ரஹஸ்யங்கள் மூன்று - திருமூல மந்திரம், வாக்யத்வயம், சரமஸ்லோகம்.
24. ஓம் என்னும் பிரணவத்தின் அக்ஷரங்கள் மூன்று - அகாரம், உகாரம், மகாரம்.
25. பகவான் கண்ணன் அர்ஜுனனுக்கு கீதையில் மூன்று யோகங்களைப் பற்றியே விரிவாக உபதேசித்தார். கர்ம யோகம், ஞான யோகம், பக்தி யோகம்.
26. முக்கனிகள் - மா, பலா, வாழை
27. முக்காலம் - இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்
28. முத்தமிழ் : இயல், இசை, நாடகம்
29. முக்குணங்கள் : சத்வம், ராஜஸம், தாமஸம்
30. மூன்று சங்கங்கள் : முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம்.
31. மூன்று சக்திகள் : இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி
32. மூவேந்தர்கள் : சேரன், சோழன், பாண்டியன்
33. மூன்று நீர்கள் : ஆற்று நீர், ஊற்று நீர், மழைநீர்
34. தத்துவங்கள் : ஆன்ம தத்துவம், வித்தியா தத்துவம், சிவதத்துவம்.
35. மூன்று அவஸ்தைகள் : ஜாக்ரத், ஸ்வப்பனம், ஸுஷுப்தி

தொகுப்பு : **ஆதித்யன்**

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

## விருந்தோம்பல் அன்றும் – இன்றும்



அடுத்தவனுக்குக் கொடுக்காமல் ஒருவன் சாப்பிடக்கூடாது என்றும், அதே சமயம் அடுத்தவன் வீட்டில் சமைத்த உணவை ஒருவன் உட்கொள்ளக்கூடாது என்றும் சாஸ்திரங்கள் நமக்கு விதித்திருக்கின்றன. முன்பெல்லாம் ஒரு கிரஹஸ்தன், “இன்றைக்கு எந்த மஹானுக்கு நான் சாப்பாடு அளிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்கப் போகிறது?” என்று நினைத்தான். இதற்கு மாறாக விருந்தாளியோ, “அடுத்தவன் வீட்டில் நான் சாப்பிடக்கூடாது. ஆனால், நீண்ட தூரம் பிரயாணம் செய்ததால், நான் மிகவும் பசியோடு இருக்கிறேன். ஏதாவது ஒரு மஹாபிரபு சிறிது உணவை எனக்கு அளித்தால், உண்டு, நான் மாலைக்குள் வீடு போய்ச் சேர்ந்து விடுவேன்” என்று எண்ணினான். அடுத்தவர்கள் அளிக்கும் விருந்தோம்பலை பார்த்தார்கள். அப்பொழுது கூட மிகவும் தயக்கத்துடன்தான் உபசரிப்பது ஒரு பெரும் பாக்கியமென்றும், அது தங்களுடைய தலையாய கடமையென்றும் கிரஹஸ்தர்கள் யாவரும் கருதினார்கள். இப்பேற்பட்ட மனோபாவமே மக்களிடம் அந்தக் காலங்களில் விளங்கியது.

ஆனால், இப்பொழுது நிலைமை எவ்வாறு இருக்கிறது? கிரஹஸ்தர்கள் தங்கள் வீட்டு வாசற்கதவை நன்றாக மூடிக்கொண்டு, மற்றவர்களுக்கு உணவளிக்க மறுக்கிறார்கள். விருந்தினர்களோ, தங்கள் பங்குக்கு, கதவை முட்டித் திறந்து கொண்டு உள்ளே வந்து சாப்பிடத் தயாராயிருக்கிறார்கள். மக்களின் மனநிலைகளில் என்ன ஒரு சீர்கேடு.

தொடரும்.



ஆரோக்கியமான வாழ்க்கைக்கு
**பசுமை**
ஆர்கானிக் & நேச்சுரல்ஸ்
நெ. 5B/4, 7வது குறுக்கு தெரு, தண்டீஸ்வரம், வேளச்சேரி, சென்னை – 600 042. (தினத்தந்தி அலுவலகம் அருகில்)
044–42325018
8667809923

**இயற்கையாக விளைவிக்கப்பட்ட காய்கறிகள், கீரைகள் மற்றும் பழங்கள்**

**வெள்ளிக்கிழமைகளில் கிடைக்கும்**

**நாட்டு பசும்பால், பாரம்பரிய அரிசி வகைகள் சிறுதானியங்கள், மரச்செக்கு எண்ணெய், தேன் இரசாயனமற்ற அழகு சாதன பொருட்கள் மூலிகை பொடிகள், மூலிகை டீ மற்றும் எண்ணற்ற இயற்கை பொருட்கள் இங்கு கிடைக்கும்.**

# ஆரோக்கியமான வாழ்க்கைக்கு

## அன்றாடம் அக்குபிரஷர்

உடலில் ஏற்படக்கூடிய எந்த நோய்களையும் தானே குணப்படுத்திக் கொள்கின்ற சக்தி இயற்கையாகவே நம் உடலுக்கு இருக்கின்றது.

நோய்களை குணப்படுத்துவதில் அக்குபிரஷர் முறை மூலம் உடல் உறுப்புகளையும், அவற்றின் இயக்கத்திற்கு காரணமான நாளமில்லா சுரப்பிகளையும் நல்ல நிலையில் நம்மால் வைத்திருக்க முடியும் அக்குபிரஷர் முறை நோய்களை குணப்படுத்துகிற முறை மட்டுமல்ல, நோய்கள் அனுகாமல் உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும் முறையாகும்.

அக்குபிரஷர் முறை மிக எளிமையானது. இதற்கு யாருடைய உதவியும் தேவையில்லை. நம்முடைய உடல் உபாதைகளை நாமே நன்கு உணர்ந்து அது தொடர்பான எந்த புள்ளியில் அழுத்தம் கொடுக்கவேண்டும் என அறிந்து இந்த முறையை வெற்றிகரமாகக் கையாள வேண்டும்.

இந்த அக்குபிரஷர் முறைகளை உங்களுக்கு நீங்களே செய்துகொள்வதோடு உங்கள் குடும்பத்தினர், நண்பர்கள் ஆகிய அனைவருடைய உபாதைகள், உடல்நலக்குறைவுகள் ஆகியவற்றை நீங்களே நீக்கிவிட முடியும்.

அன்றாட உங்கள் களைப்பை நீக்கி கொள்ளும் விதத்தில், சக்தி கிடைக்கக்கூடிய மையப் பகுதிக்கு அழுத்தம் கொடுத்து, சக்தியைப் பெற்று களைப்பிலிருந்து விடுபடலாம். குறிப்பிட்ட நேரங்களில் ஓய்வு கிடைக்கின்ற போது, உங்களுக்குத் தோன்றுகிற நேரங்களில் அக்குபிரஷர் முறையை கையாண்டு நீங்கள் பயனடைய முடியும்.


**Dr.செந்தில்குமார்**
Acupuncture Specialist, Yoga & Varma Healer

# பிரதக்ஷிணம்

"வேதபாரதி செய்திகள்" வாசகர்களை நவம்பர் 2019 முதல் சிறு உருவம் கொண்ட எறும்பு முதல் பெரிய உருவம் கொண்ட யானை வரை பலவித மிருகங்கள், பறவைகள், பூச்சிகள் என பல உயிரினங்கள் இறைவனை வழிபட்ட கோயில்களுக்கு "பிரதக்ஷிணம்" வைக்க அழைத்துச் செல்கிறோம். சென்ற மாத குரங்கு, அணில், காகம் ஆகியவை இறைவனை வழிபட்டு முக்தி அடைந்த ''குரங்கணில்முட்டம்'' கோயிலுக்கு அழைத்துச் சென்றோம். இந்த மாதம் ஈ வழிபட்ட ஒரு ஸ்தலத்தில் பிரதிக்ஷிணம் வைக்கவிருக்கிறோம்.

## பிரதிக்ஷிணம் - 14
## "ஈ" வழிபட்ட ஸ்தலம்
## திரு ஈங்கோய் மலை

**"காலைக் கடம்பர், மத்தியானச் சொக்கர், அந்தித் திருவேங்கி நாதர்"** என்பது பழமொழி. கரூர் மாவட்டத்தில் உள்ள குளித்தலை அருகில் இருக்கும் மூன்று சிவஸ்தலங்களையும் ஒரே நாளில் காலை, பகல், மற்றும் மாலை வேளைகளில் சென்று வழிபட்டால் புண்ணியம் என்று கூறுவார்கள். இதைக் கூறுவதற்கு ஏற்பட்ட பழமொழிதான் இது. தற்போது நாம் செல்லவிருப்பது காவிரி வடகரைத் தலமாகிய **"திரு ஈங்கோய்மலை"**க்குத்தான். சிவனின் தேவாரப்பாடல் பெற்ற 274 சிவாலயங்களில் இது 63 வது தேவாரஸ்தலம் ஆகும். சிவனின் பாடல் பெற்ற ஸ்தலங்களில் மலை மீது இருப்பது மிகக்குறைவு. அதில் ஒன்றுதான் **"திரு ஈங்கோய் மலை"** இந்த மலை இங்கு எப்படி ஏற்பட்டது என்பதற்கு ஸ்தலபுராணம் நீண்ட விளக்கம் அளித்துள்ளது.





இந்த மலைக்கு "ஈங்கோய் மலை" என்று பெயர் வரக் காரணம் என்ன?

முனிவர்களால் வணங்கப்பெறும் **"அகத்திய முனிவர்"** ஒரு சமயம் தன் சிஷ்யர்களோடு கேதாரம் முதல் ராமேஸ்வரம் வரை தீர்த்த யாத்திரை புறப்பட்டார். தென்திசை வந்த அகத்தியர் இங்கு சிவனை வழிபட நினைத்தார். அந்த மாலை வேளையில் கோயில் அர்ச்சகர்கள் பூஜையை முடித்துவிட்டு கோயிலின் கதவுகளை மூடிவிட்டு சென்று விட்டனர். ஈசனை தரிசிக்கமுடியவில்லையே என்று **"அகத்தியர்"** மிகவும் வருத்தம் அடைந்தார். அப்போது ஒரு அசரீரி வாக்கு ஒலித்தது. "மா பாதகங்களையும் தீர்த்து அருள் புரியும் இம்மலையை அடைந்த பிறகும் ஏன் துயரம் அடைகிறாய். பசுக்கள் பக்ஷிகள், மிருகங்கள் ஆகியவை எந்தக் காலத்தில் இங்கு வந்தாலும் குற்றமில்லை அவற்றிலும் காற்று, ஈ, பசு, அக்னி, நெய், நெல், அந்தணர் ஆகியோர் எக்காலத்திலும் அசுத்தமாவதில்லை. தக்ஷகன் என்னும் நாகராஜன் இம்மலையின் மேற்புறம் சர்ப்ப நதி வடிவில் இருக்கிறான். அங்கு ஸ்நானம் செய்பவர்கள் தாம் விரும்பிய வடிவைப் பெறுவதோடு மீண்டும் பழைய உருவையும், பெறுவார்கள். ஆகவே நீ அத்தீர்த்தத்தை நாடிச் சென்றால் உன் கருத்து நிறைவேறும்" என்று கூறியது. மகிழ்வுற்ற அகத்தியர் சர்ப்ப நதியை நாடிச்சென்றார். அங்கு அந்த நதி காவிரி நதியோடு கலந்திருந்தது. அந்த சங்கமத்தில் தனக்கு **"ஈ"** வடிவம் வேண்டும் என்று வேண்டி ஸ்நானம் செய்தவுடன் **"ஈ"** வடிவம் பெற்றார். இவ்வடிவுடன் இம்மலை மீது பறந்து வந்து, சன்னதி கதவின் சாவித்துவாரம் வழியாக உள்ளே புகுந்து ஈசனை கண்ணாரத் தரிசித்து, மனத்தினால் எல்லா பூசைகளையும் செய்தார். பிறகு வெளியில் வந்து மீண்டும் சர்ப்ப நதியில் ஸ்நானம் செய்தவுடன் முந்திய முனி வடிவம் பெற்றுத் தனது இருப்பிடம் சென்றார். அது முதல் இந்த மலை **"ஈங்கோய் மலை"** என்றும் சிவனுக்கு **"ஈங்கோய்நாதர்"** என்றும் பெயர் ஏற்பட்டது.

சுமார் 500 படிகளில் ஏறிச்சென்றால் கோயிலை அடையலாம். கோயிலில் தட்ஷிணாமூர்த்தி, விநாயகர்,

சுப்பிரமணியர் ஆகியோருக்கு தனித்தனி சந்நிதிகள் உள்ளன. உள் பிரகாரத்தில் நவக்கிரஹம், நால்வர் சந்நிதிகள் உள்ளன. அம்பாளுக்கும், சுவாமிக்கும் தனித்தனியே கோயில் விமானங்கள் உள்ளன.

இந்த ஊர் மக்கள் இந்த மலையை "திருவேங்கி மரகத மலை'' என்றும் மூலவரை ''மரகதாலேஸ்வரர்'' என்று அழைக்கிறார்கள். பெயருக்கு ஏற்றார்போல் லிங்கம் பச்சை நிறத்தில் காணப்படுகிறது. சிவராத்திரி நாள் அன்று இறைவன் மீது சூரியன் ஒளி படுகிறது.

திருச்சி - கரூர் சாலை வழியில் குளித்தலை என்ற ஊரிலிருந்து காவிரி ஆற்றைக் கடந்து சென்றால் காவிரி வடகரையில் இந்த கோயிலை அடையலாம்.

தொகுப்பு : **டி.சூரியநாராயணன்**

## மார்கழி - தை மாத விசேஷங்கள்
**(ஜனவரி 15.01.2020 முதல் பிப்ரவரி 12.02.2020 வரை)**

| | |
|---|---|
| 15.01.2020 | - ஐயப்பன் மஹா விளக்கு - பொங்கல் பண்டிகை - உத்ராயண புண்யகாலம் - திருவையாறு ஸ்ரீ தியாகராஜர் ஆராதனை |
| 16.01.2020 | - கனுப்பொங்கல் |
| 20.01.2020 | - ஏகாதசி |
| 22.01.2020 | - ப்ரதோஷம் |
| 24.01.2020 | - தை அமாவாசை |
| 26.01.2020 | - குடியரசு தினம் |
| 01.02.2020 | - ரதஸப்தமி |
| 02.02.2020 | - பீஷ்மாஷ்டமி |
| 05.02.2020 | - ஸர்வ பீஷ்ம ஏகாதசி |
| 06.02.2020 | - ப்ரதோஷம் |
| 08.02.2020 | - தைப்பூசம் / பௌர்ணமி - வடலூர் ராமலிங்க சுவாமிகள் ஜோதி தரிசனம் |
| 12.02.2020 | - சங்கடஹர சதுர்த்தி |



# தர்மத்தின் குரல்
# பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்
*அத்தியாயம் 2 : மறுபிறப்பு*

## 2.14-11. இன்னும் சில கேள்விகள்: (தொடர்ச்சி)

ஒரு முறை அவன் 48 நாட்கள் தவமிருந்தான். அப்பொழுது அவன் உபவாசமும் இருந்தான். 49ம் நாள் அவன் சாப்பிட உட்கார்ந்தான். அப்பொழுது திடீரென்று பசியால் வாடிய ஒரு ப்ராஹ்மணன் தோன்றி உணவு வேண்டினான். அவனுக்கு உணவளித்து அவனை அனுப்பினான். மீதமுள்ளதைச் சாப்பிட முற்பட்டபோது, இன்னொருவன் நான்கு நாய்களுடன் வந்தான். அவன் தன்னிடமிருந்த உணவு முழுவதையும் அவர்களுக்குக் கொடுத்து விட்டான். கடைசியில் அவன் தண்ணீர் குடிக்க முற்பட்டான். அப்பொழுது இன்னுமொருவன் வந்து அதையும் கேட்டான். ரந்திதேவன், அவனுக்குத் தண்ணீரையும் கொடுத்துவிட்டான். ரந்திதேவன் கைகளைக் குவித்து ஆகாசத்தைப் பார்த்துக்கொண்டு, கடவுளே, எல்லோருடைய துன்பங்களும் எனக்கு வந்து சேரட்டும், ஒவ்வொருவரும் மகிழ்ச்சியாக இருக்கட்டும் என்று பிரார்த்தனை செய்தான்.

மனு சொல்கிறார் : "உண்மையில் கஷ்டப்படுகிறவர்களை அலட்சியம் செய்பவன், தவம் ஏதும் செய்திருந்தாலும், அதனை இழக்கிறான்".

*12. ப்ராரப்தம், ஸம்ஸ்காரம் இரண்டுக்கும் உள்ள வேற்றுமை என்ன?*

நாம் செய்யும் கர்மாக்களுக்கெல்லாம் இரண்டு நிலைகள் உள்ளன. ஒன்று, துக்கம் அல்லது சுகம் வடிவில் அனுபவிக்கப்படுகிற பலன். இது ப்ராரப்தம் எனப்படும். இரண்டாவது, அது மனத்தில் ஏற்படுத்துகிற பதிவுகள். எல்லாக் கர்மாக்களின் விளைவாக ஏற்படுகிற பதிவுகள் ஸம்ஸ்காரம் எனப்படும். இந்த ஸம்ஸ்காரமே, ஒருவன், ஒரு குறிப்பிட்ட வகையான செயல்களைச் செய்விக்கும் உந்துசக்தியாகிறது. கர்மா போகத்தில் முடிகிறது. ஸம்ஸ்காரம் ஒருவனின் விருப்பங்களைத் தீர்மானிக்கிறது. உதாரணமாக, ஒரு பொருளைப் பற்றிப் படிப்பது, அது பற்றிய அறிவைத் தருகிறது என்பது மட்டுமல்ல, அதை இன்னும் படிக்க வேண்டும் என்ற ஆசையையும் ஏற்படுத்துகிறது.

-தொடரும்

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier




முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**




ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

டி. சூரியநாராயணன்

பகுதி - 9



“மஹாபாரதம்” மொத்தம் 18 பர்வங்களைக் கொண்டது. அதில் ஆறாவது பர்வமான ‘‘பீஷ்ம பர்வதத்தில்’’ அத்தியாயம் 25 முதல் 42 முடிய உள்ள 18 அத்தியாயங்களில் தான் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனுக்கு சொல்லும் உபதேசங்கள் உள்ளன. இதுதான் ‘‘பகவத் கீதை’’. பகவத் கீதையில் மொத்தம் 700 ஸ்லோகங்கள் உள்ளன (ஒரு சில புத்தகங்களில் மொத்தம் 701 ஸ்லோகங்கள் என்பார்கள். இதற்கு காரணம் கீதையில் 13ம் அத்தியாயத்தில் முதல் ஸ்லோகத்தில் அர்ஜுனன் பகவானிடம்

**அர்ஜுன உபவாச**

**ப்ரக்ருதிம் புருஷம் சைவ க்ஷேத்ரம் க்ஷேத்திரக்ஞமேவ ச/**

**ஏதத்3வேதி3துமிச்சா2மி ஜ்ஞாநம் ஜ்ஞேயம் ச கேஸ2வ //**

கேசவா, பிரக்ருதி, புருஷன், க்ஷேத்திரம், க்ஷேத்ரக்ஞன், ஜ்ஞாநம், ஞேயம் என்னும் இவற்றை அறிய விரும்புகிறேன்.

இந்த ஸ்லோகம் பல பதிப்புகளில் காணப்படுவதில்லை. இதையும் சேர்த்தால் மொத்தம் 701 ஸ்லோகங்கள்.

இந்த 700 ஸ்லோகங்களில் திருதராஷ்ட்ரன் கீதையின் முதல் ஸ்லோகம் மட்டும் (ஒரே ஒரு ஸ்லோகம் மட்டும்) சொல்கிறான், அர்ஜுனன் பேசுவதாக 84 ஸ்லோகங்கள், சஞ்சயன் பேசுவதாக 41 ஸ்லோகங்கள், பகவான் ஸ்ரீகிருஷ்ணன் சொல்லுவது 574 ஸ்லோகங்கள். 700 ஸ்லோகங்களும் கீழ்க்கண்ட 18 அத்தியாயங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. (ஒவ்வொரு அத்தியாயத்திலும் அடங்கியுள்ள ஸ்லோகங்கள் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| *1. அர்ஜுன விஷாத யோகம்* | *47* |
| *2. ஸாங்கிய யோகம்* | *72* |
| *3. கர்ம யோகம்* | *43* |
| *4. ஞானகர்ம ஸந்யாஸ யோகம்* | *42* |
| *5. ஸந்யாஸ யோகம்* | *29* |
| *6. தியான யோகம் (ஆத்ம ஸம்யம)* | *47* |
| *7. ஞான விக்ஞான யோகம்* | *30* |
| *8. அக்ஷரப்ரஹ்ம யோகம்* | *28* |
| *9. ராஜவித்யா, ராஜகுஹ்ய யோகம்* | *34* |
| *10. விபூதி யோகம்* | *42* |
| *11. விஸ்வரூபதர்ஸன யோகம்* | *55* |
| *12. பக்தி யோகம்* | *20* |
| *13. க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ விபாக யோகம்* | *34* |
| *14. குணத்ரய விபாக யோகம்* | *27* |
| *15. புருஷோத்தம யோகம்* | *20* |
| *16. தெய்வாஸுர ஸம்பத் விபாக யோகம்* | *24* |
| *17. ஸ்ரத்தாத்ரய விபாக யோகம்* | *28* |
| *18. மோக்ஷ ஸந்யாஸ யோகம்* | *78* |
| | *700* |

*இப்படி 700 ஸ்லோகங்களை 18 அத்தியாயங்களாக பிரித்து அதற்கு ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் ஒரு "யோகம்" என்று பகவான்தான் பெயர் கொடுத்தாரா? என்ற கேள்வி எழும். இதற்கு மஹாபெரியவா தம்முடைய "அருள் உரை"யில் கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.*

*"பகவான் இப்படி பதினெட்டு அத்தியாயத்திற்கும் தலைப்பு போட்டாரா? அவர்பாட்டுக்கு அர்ஜுனனோடு ஸம்வாதம் பண்ணிக்கொண்டு (ஸம்பாஷித்துக் கொண்டு) தானே இருந்தார்? நடுவில் அத்யாயத் தலைப்பு எங்கே வந்தது? என்று கேட்டால் எனக்கு பதில் சொல்லத் தெரியாது. கீதை பகவான் சொன்னது என்று வழிவழியாக வந்திருக்கும் நம்பிக்கை நமக்கு போதும். அதைப் பாரதத்தில் எழுதிய வ்யாஸர் தலைப்புப் போட்டிருந்தால் அதுவும் பகவானே போட்ட மாதிரிதான். வ்யாஸரும் பகவானின் அவதாரம்தான் "அம்சாவதாரம்".*

தொடரும்....

**டி.சூரியநாராயணன்**



# புதுவை வேதபாரதியின் பண்பாட்டு பயணம்

## "துலா ஸ்நானம்"

*இரண்டாம் ஆண்டின் தனது பயணத்தை துவக்கிய வேதபாரதியின் புதுச்சேரி கிளை கடந்த 10.11.2019 ஞாயிற்றுக்கிழமையன்று "துலா ஸ்நானம்" செய்ய காவிரியை நோக்கி புறப்பட்டது.*



*சக குடும்ப சமேதராக பேருந்தின் மூலம் "மாயவரத்தை" அடைந்து அங்கே ''துலாக்கட்ட'' ஸ்நானம் செய்தனர். காவிரிக் கரையில் பித்ரு கர்மாக்களை முடித்துக் கொண்ட புருஷர்கள் தங்களை குடும்பத்தோடு இணைத்துக் கொண்டு ஈசனையும் வழிபட்டனர்.*

*காவிரி கவர்ந்துவிட்டதால் வேதபாரதி குடும்பத்தினரால் அவளிடமிருந்து பிரிவதற்கு மனமின்றி, ''சிவராமபுரத்தில்'' அவளுடைய பிரவாகத்தில் மீண்டும் இணைந்து ஆனந்த குளியல் போட்டனர்.*

*குளியலின் பசியை, சிவராமபுர அக்ரஹார சொந்தங்களின் சூடான காஃபி மற்றும் சுவையான மோரால் தீர்த்து கொண்டனர். தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்து பின்னர் கரைந்துவிட்ட அக்ரஹாரங்களில் எஞ்சியுள்ள ஒரு சிலவற்றில் எழில்மிகு ''விசராமபுரம்'' அக்ரஹாரமும் ஒன்று. அக்ரஹாரத்தின் அடையாளங்களை அறிந்திராத இளம் தலைமுறையினரும், குழந்தைகளும் அன்றைய தினம் ஆனந்தத்தின் உச்சத்திற்கு சென்றது சிறப்பு. "சிவனும், ராமனும்" பழமை மாறாத "சிவராமபுர" அக்ரஹாரத்திற்கு தொடர்ந்து உறுதுணையாய் இருக்க பிரார்த்தித்தவாறு அங்கிருந்து ''சங்கராபுரம்'' நோக்கி புறப்பட்டது புதுவை வேதபாரதி குடும்பத்தினரின் பேருந்து.*

மஹா பெரியவாளை ப்ரத்யக்ஷமாக மையப்படுத்தி உருவாகிவரும் நித்ய அக்னிஹோத்திரிகளின் அக்ரஹரமே சங்கராபுரம். அங்கே வேதபாடசால, கோ-சாலையுடன் மஹா பெரியவாளின் தரிசனம் பெற்று பின் மதிய உணவை கூட்டமாக, சக குடும்பமாக புசித்து மகிழ்ந்தனர். சற்று ஓய்வுக்குப்பின் மாலை அங்கிருந்து திருவிடை மருதூர் நோக்கி மீண்டும் புறப்பட்டது பேருந்து.



மாலை "திருவிடைமருதூரில்" பரம்ஹத்தி தோஷம் நீக்கி அருள்தரும் அருள்மிகு மஹா லிங்கஸ்வரர் தரிசனத்தை "ஸ்ரீருத்ர பாராயணம் செய்து, குடும்ப சகிதமாய் முடித்து அங்கே இரவு உணவையும் முடித்துக்கெண்டு புதுவை நோக்கி திரும்பியது வேதபாரதி குடும்பம்.

ஒரே குடும்பமாய், காலை, மதியம், இரவு உணவு எடுத்துக் கொண்டது, சிவராமபுர அக்ரஹார உபசரிப்பு போன்ற நிகழ்வுகள், கிட்டத்தட்ட அரை நூற்றாண்டிற்கு பின்நோக்கி அழைத்துச் சென்று கூட்டுக் குடும்ப பிராமணர்களின் பாரம்பரிய வாழ்க்கை முறையை நினைவூட்டியது.

வழக்கம்போல உணவு, வசதியான பேருந்து, சிறப்பான தரிசனம், விசேஷமாக ''திருவிடைமருதூரில்'' ஸ்ரீ ருத்ர பாராயணம் ஆகியவற்றை புதுவை வேதபாரதி நிர்வாகக்குழு மிக சிறப்பாக செய்திருந்தது.

அடுத்தடுத்து குடும்பத்தோடு இதுபோல் உலா சென்று குதூகலிக்கவேண்டும் என்ற எழுச்சியை நெஞ்சில் விதைத்துவிட்ட நிகழ்வாக இருந்தது இந்த பயணம் "பாரம்பரியத்தை" திருப்பும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் "வேத பாரதிக்கு" நன்றிகளை சமர்ப்பித்து அவரவர் இல்லம் திரும்பினர்.

ஆதிரையன்.



G. SIVAGAMASUNDARI
99940 89133

N. GURUMURTHY
99940 89140



**SRI SASTHA CATERING**



*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Variation in Order*



**14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.**

**திருக்கோயில் உழவாரப்பணி மன்றம்**

*14, பாலசுப்ரமணியர் கோயில் தெரு,*
*லட்சுமி நகர், வேளச்சேரி, சென்னை - 600 042.*

செல்: **9445121080, 7200935145**

ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகள் மகம் நட்சத்திரத்தை முன்னிட்டு எல்லா மாதமும் வேளச்சேரி **அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயிலில் திருவாசகம் முற்றோதுதல்** நமது மன்றத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நடைபெறும் நாள் **13.01.2020 திங்கட்கிழமை காலை 8.00 மணிமுதல் மதியம் 1.00 மணிவரை நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னம்பாலிப்பு நடைபெறும்.** அனைவரும் கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**திருக்கோயில் உழவாரப்பணி**

**உழவாரப்பணி** வரும் **05.01.2020** ஞாயிறு காலை
**கோவூர் அருள்மிகு சவுந்தராம்பிகை அம்பாள்**
**உடனுறை சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில்**